**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8060972

1. District மாவட்டம் : கோயம்புத்தூர் PS காவல்நிலையம்: [illegible] பிரிவு Year ஆண்டு: 2019 FIR No. மு.த.அ. எண்: 7/2019/AC/CB Date நாள்: 22.03.2019

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended by Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: (Amendment) Act 2018 & Crpc Sections பிரிவுகள்: 102 Crpc
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 09.11.18 Date to நாள் வரை : 09.11.18
Time Period நேர அளவு : Time from நேரம் முதல் : 13.20 hrs Time to நேரம் வரை : 19.00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.11.2018 Time நேரம் : 11.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 10.11.2018 GD Vol. II Time நேரம் : 11.00 hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் கிழக்கு 6km தொலைவில்
Beat Number : முறைக் காவல் எண் (b) Address முகவரி : ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலகங்கள், கோயம்புத்தூர்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. P.N. பிரபாகரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் —
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் மாவட்ட ஆய்வு குழு அலுவலர் (g) Address : முகவரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் கோயம்புத்தூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) திரு. M. ராஜகுமாரன், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலகம், கோயம்புத்தூர்
2) திரு. P. லெனின் தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) திருப்பூர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
No delay

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

22/3/2019 (P.N. [illegible])

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் 3/19

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
22.03.19

Name: பெயர் ஸ்ரீ இலதா
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கோயம்புத்தூர்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

சமர்ப்பிக்கப்படுகிறது.

**Contents of FIR in Cr.No.7/2019/AC/CB u/s. 7(a) of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 and 102 Cr.P.C.**

09.11.2018ம் தேதி 13..20 மணிமுதல் 19.00 மணிவரை கோயமுத்தூர் ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலகத்தில் நடைபெற்ற திடீர் தணிக்கை நடவடிக்கையை தொடர்ந்து, 10.11.2018ம் தேதி காலை 11.00 மணியளவில் கோயமுத்தூர் மாவட்ட ஆய்வு குழு அலுவலர் திரு.பி.என்.பிரபாகரன் அவர்கள் மேற்படி திடீர் தணிக்கையில் கண்டுபிடிக்கப்பட்ட முறைகேடுகள் மீது நடவடிக்கை எடுக்க கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்திற்கு வழக்கு பதிவு செய்ய அனுமதி கோரி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. சென்னை இயக்குநரகத்திலிருந்து புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுதி வாய்ந்த அதிகாரம் படைத்தவர்களிடமிருந்து அனுமதி பெற்று தரக் கோரி விழிப்பு ஆணையருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. அதனைதொடர்ந்து Labour and Employment (E1) Department in G.O.(D) No.92 dated 20.02.2019-ன்படி 1) திரு.எம்.ராஜசேகரன், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) கோயமுத்தூர் 2) திரு.பி.வெனின், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) திருப்பூர் ஆகியோர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதை தொடர்ந்து சென்னை இயக்குநரக SC No.41815/2018/LAB/CB dt.18.03.2019-ன்படி வழக்கு பதிவு செய்ய அறிவுறுத்தப்பட்டது. அதன்படி இன்று 22.03.2019ம் தேதி 17.00 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.7/2019 AC/CB u/s. 7(a) of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 and 102 Cr.P.C –ன்படி 1) திரு.எம்.ராஜசேகரன், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) கோயமுத்தூர் மற்றும் 2) திரு.பி.லெனின், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) திருப்பூர் ஆகியோர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. புகாரின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் P.N.பிரபாகரன் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக் குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோயமுத்தூர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயமுத்தூர். ந.க.எண். 433/ 2018/ஐ1 நாள் 10.11.2018 அய்யா,

பொருள்: திடீர் தணிக்கை- கோவை மாவட்டம் - ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலகங்கள்,கோவை-திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது- நடவடிக்கை குறிப்புடன் புகார் மனு மேல்நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டது- சம்பந்தமாக. கோயமுத்தூர் ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலகத்தில் பணிபுரியும் தொழிலாளர் உதவி ஆணையர் திரு.எம்.ராஜசேகரன் அவர்கள் அவருக்கு கீழ் பணிபுரியும் தொழிலாளர் துணை ஆய்வாளர்கள், தொழிலாளர் உதவி ஆய்வாளர்கள் மற்றும் முத்திரை ஆய்வாளர்கள் ஆகியோரிடம் மாதாந்திரம் பெறும் மாமூல் தொகையை தீபாவளிக்கு பின்னிட்டு பெற்று கொள்கிறேன் என்று சொல்லி 09.11.2018ம் தேதி அவரது அலுவலகத்தில் வைத்து அவருக்கு மாமூல் தொகையை தரச் சொல்லி கேட்டுள்ளதாகவும் அதை தொடர்ந்து அன்றைய தினம் காலை அவருக்கு கீழ் பணிபுரியும் மேற்படி அலுவலர்கள் அவருக்கு மாமூல் தொகையை அந்த அலுவலகத்தின் தரை தளத்தில் உள்ள திரு.எம்.ராஜசேகரன், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) என்பவருக்கு அவரது அலுவலக அறையில் வைத்து கொடுத்துள்ளதாகவும் கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில், நானும் கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு ஆய்வாளர் திருமதி.கி.சசிலேகா மற்றும் காவல் குழுவினருடன் இணைந்து மேற்படி அலுவலகத்தை இன்று 09.11.2018ம் தேதி 13.20 மணிமுதல் 19.00 மணிவரை திடீர் தணிக்கை செய்யப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் திடீர் தணிக்கை மேற்கொண்ட போது தொழிலாளர் உதவி ஆணையர் திரு.எம்.ராஜசேகரன் என்பவர் அவரது அறையில் இல்லை. அவரை பற்றி விசாரித்த போது அவர் 2வது தளத்தில் கூடுதல் தொழிலாளர் ஆணையர் அவர்கள் நடத்தி கொண்டிருக்கும் கூட்டத்திற்கு சென்றுள்ளதாக தகவல் கிடைத்தது. உடனே திடீர் தணிக்கை குழுவினர் 2வது தளத்தில் உள்ள கூடுதல் தொழிலாளர் ஆணையர் அலுவலக அறைக்குள் சென்று கூட்டம் நடத்தி கொண்டிருந்த கூடுதல் தொழிலாளர் ஆணையர் திருமதி.ஆர்.செந்தில்குமாரி அவர்களிடம் எங்களை அறிமுகபடுத்திக் கொண்டு திடீர் தணிக்கைக்கு வந்த விபரம் தெரிவிக்கப்பட்டது. அந்த அறையில் 1) கூடுதல் தொழிலாளர் ஆணையர் திருமதி.ஆர். செந்தில்குமாரி, 2) தொழிலாளர் துணை ஆணையர் திருமதி.லீலாவதி, கோவை 3) தொழிலாளர் உதவி ஆணையர் திருமதி.பிரேமா, திருப்பூர் 4) தொழிலாளர் உதவி ஆணையர் திரு.லெனின். திருப்பூர் 5) தொழிலாளர் உதவி ஆணையர் திரு.எம்.ராஜசேகரன், கோவை 6) தொழிலாளர் இணை ஆணையர் திரு.எல்.ரமேஷ், கோவை 7)தொழிலாளர் உதவி

ஆணையர் திரு.மாதேஷ்வரன், வால்பாறை 8) தொழிலாளர் உதவி ஆணையர் திரு.முத்துபாண்டி, குன்னூர், 9) தொழிலாளர் உதவி ஆணையர் திரு.பாலதண்டாயுதம், ஈரோடு ஆகியோர்கள் இருந்தார்கள். கூடுதல் தொழிலாளர் ஆணையர் திருமதி.ஆர்.செந்தில்குமாரி அவர்களிடம் விசாரித்தபோது பதிவு பெற்ற சார்நிலை அலுவலர்களுக்கான அக்டோபர் 2018ம் மாதத்திற்கான பணித்திறனாய்வு கூட்டம் மற்றும் முத்திரை கொல்லர் (Stamping smith) பணிக்கான எழுத்து தேர்வு வருகிற டிசம்பர் மாதம் 2ம் தேதி நடைபெறுவதையொட்டி முன்னேற்பாடுகள் தொடர்பான கூட்டம் நடைபெறுவதாக சொன்னார். தொழிலாளர் உதவி ஆணையர் திரு.எம்.ராஜசேகரன், கோவை அவரிடம் உள்ள பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவர் தனது மணி பர்சை எடுத்து ஆஜர் செய்து அதில் ரூ.980/- உள்ளது என்று தெரிவித்து அது தனது சொந்த பணம் என்று சொன்னதால் மேற்படி பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அவரிடம் வேறு பணம் ஏதும் உள்ளதா என்று கேட்ட போது அவர் தனது பேண்டின் இடது பக்க பாக்கெட்டிலிருந்து இரண்டு ஒட்டப்படாத காக்கி நிறமுடைய கவர்களை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ஒரு கவரை பிரித்து பார்த்த போது அதில் ரூ.500/- ரூபாய் தாள்கள் 46 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.23,000/- இருந்தது. இன்னொரு பாதி கிழிக்கப்பட்ட நிலையில் இருந்த கவரின் மேற்புறம் 630 34097486 ECTOR AVL, E OF THE ASST. INSPECTOR OF LABOUR, IST CIRCIE, DR.BALASUNDARAM ROAD, NEAR R.T.O. OFFICE, COIMBATORE 641018 என்று எழுதப்பட்டிருந்தது. கவரை திறந்து பார்க்க ரூ.500/- ரூபாய் தாள்கள் 16 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.8,000/- இருந்தது. மேற்படி இரண்டு கவர்களில் இருந்த தொகைகளை பற்றி அவரிடம் கேட்க அன்று காலை தனது அறையில் வைத்து திரு.செல்லப்பா இசக்கி, முத்திரை ஆய்வாளர், இரண்டாம் வட்டம், என்பவர் ரூ.8000/-ஐ ஒரு கவரில் வைத்தும் மேலும் திரு.நவநீதன், தொழிலாளர் உதவி ஆய்வாளர், 6வது வட்டம் மற்றும் கூடுதல் பொறுப்பு தொழிலாளர் துணை ஆய்வாளர் 3வது வட்டம், கோவை என்பவர் ஒரு ரூ.23,000/-ஐ ஒரு கவரில் வைத்து கொடுத்ததாகவும், அது மாதா மாதம் அவர்கள் கொடுக்கும் மாமூல் தொகை என்றும் கடந்த 2 மாதங்களாக மாமூல் பெற்று கொண்டு வருவதாகவும் சொன்னார். எனவே மேற்படி பணத்தை காவல் ஆய்வாளர் திருமதி.சசிலேகா அவர்களால் கைப்பற்றப்பட்டு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. தொழிலாளர் உதவி ஆணையர் திரு.பி.லெனின்,

திருப்பூர் அவரிடம் உள்ள பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல அவர் தனது மணி பர்சை எடுத்து ஆஜர் செய்து அதில் பணம் ரூ.500/- உள்ளது என்று தெரிவித்து அது தனது சொந்த பணம் என்று சொன்னதால் மேற்படி பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அவரிடம் வேறு பணம் ஏதும் உள்ளதா என்று கேட்டபோது அவர் தனது பேண்டின் இடது பக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.14,500/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணத்தை பற்றி கேட்ட போது மேற்படி பணமானது தனது கீழ் பணிபுரியும் திரு.பேச்சிமுத்து, முத்திரை ஆய்வாளர், தாராபுரம் என்பவர் மாதா மாதம் மாமூல் கொடுப்பது போல் 08.11.2018ம் தேதி கொடுத்ததாகவும், மேற்படி பணத்தை அன்று கூட்டத்திற்கு வரும்போது தான் கொண்டு வந்ததாகவும் சொன்னார். மேற்படி பணத்தை காவல் ஆய்வாளர் திருமதி.சசிலேகா அவர்களால் கைப்பற்றப்பட்டு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. தொழிலாளர் உதவி ஆணையர் திரு.மாதேஷ்வரன், வால்பாறை அவரிடம் உள்ள பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல அவர் தனது சட்டையின் இடதுபுற மேல் பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.1000/- எடுத்து ஆஜர் செய்து அது தனது சொந்த பணம் என்று சொன்னதால் அந்த பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவர் அமர்ந்திருந்த இருக்கையின் முன்பிருந்த டேபிளுக்கு அடியில் அவரது கால்களுக்கு இடையில் ஒரு காக்கி கவரும், அதனருகே கத்தையாக நூறு ரூபாய் நோட்டுக்கள் இருந்தது. மேற்படி கவரையும் பணத்தையும் எடுத்து பார்த்தபோது அந்த கவரினுள் 4 ஐநூறு ரூபாய் நோட்டுகள் மொத்தம் ரூ.2000/- இருந்தது. மேலும் கத்தையாக இருந்த பணத்தில் 5 நூறு ரூபாய் நோட்டுக்கள் மொத்தம் ரூ.500/- இருந்தது. ஆக மொத்தம் கீழே இருந்து எடுக்கப்பட்ட பணம் மொத்தம் ரூ.2,500/- இருந்தது. அந்த பணம் பற்றி திரு.மாதேஷ்வரனிடம் கேட்க அந்த பணம் பற்றி தனக்கு தெரியாது என்றும் அதை யார் அங்கு போட்டார்கள் என்றும் தெரியாது என்று சொன்னார். அங்கிருந்த மற்ற அலுவலர்களிடம் விசாரித்தபோது அவர்களும் அந்த பணம் தங்களுடையது இல்லை என்றும் அந்த பணம் பற்றி தெரியாது என்றும் அதை யார் அங்கு போட்டார்கள் என்று தெரியாது என்றும் அனைவரும் சொன்னார்கள். அந்த பணத்தை யாரும் உரிமை கோராததால் ரூ.2500/-ஐ காவல் ஆய்வாளர் திருமதி.சசிலேகா அவர்களால் கைப்பற்றப்பட்டு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் அந்த கூட்டத்தில் கலந்து கொண்ட மற்ற அலுவலர்கள் தொழிலாளர் துணை ஆணையர் திருமதி.லீலாவதி, கோவை, தொழிலாளர் உதவி ஆணையர் திருமதி.பிரேமா,

திருப்பூர், தொழிலாளர் இணை ஆணையர் திரு.எல்.ரமேஷ், கோவை, தொழிலாளர் உதவி ஆணையர் திரு.முத்துபாண்டி, குன்னூர், தொழிலாளர் உதவி ஆணையர் திரு.பாலதண்டாயுதம், ஈரோடு ஆகியோர்களை விசாரித்து அவர்களிடம் உள்ள பணம் பற்றி விசாரிக்க அவர்கள் தங்களிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார்கள். அந்த பணம் தங்களது சொந்த பணம் என்று சொன்னதால் அதனை அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. தொழிலாளர் உதவி ஆய்வாளர் வட்டம் 6, கூடுதல் பொறுப்பு தொழிலாளர் துணை ஆய்வாளர் 3ம் வட்டம், திரு.ச.நவநீதன் மற்றும் முத்திரை ஆய்வாளர் திரு.சு.செல்லப்பா இசக்கி ஆகியோர்களிடம் தனித்தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். தாராபுரத்தை சேர்ந்த, முத்திரை ஆய்வாளர் பேச்சிமுத்து அந்த அலுவலகத்தில் இல்லாததால் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. நடவடிக்கை முடிக்கப்பட்டு அந்த நடவடிக்கையில் நானும், காவல் ஆய்வாளர் மற்றும் அந்த அலுவலக அறையில் இருந்த திருமதி.ஆர். செந்தில்குமாரி, திருமதி.லீலாவதி, திருமதி.பிரேமா, திரு.லெனின், திரு.எம்.ராஜசேகரன், திரு.எல்.ரமேஷ், கோவை திரு.மாதேஷ்வரன், திரு.முத்துபாண்டி, திரு.பாலதண்டாயுதம் ஆகியோர்களிடம் அனைத்து பக்கங்களிலும் கையெழுத்து பெறப்பட்டது. இத்துடன் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.48,000/-, திரு.ச.நவநீதன், திரு.சு.செல்லப்பா இசக்கி ஆகியோரது வாக்குமூலங்கள், 09.11.2018ம் தேதி சார்நிலை அலுவலர்களுக்கான அக்டோபர் 2018 மாதத்திற்கான பணித்திறனாய்வு கூட்ட குறிப்பாணை கடிதம் ஈ/2294/2018 நாள் 1.11.2018, 09.11.2018ம் தேதி கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் மூன்று வருகை பதிவேடு தாள்கள், கவர்கள் ஆகியவற்றை மேல்நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து ஒப்படைக்கிறேன். உதவி ஆணையர்கள் திரு.எம்.ராஜசேகரன், திரு.பி.லெனின் ஆகியோர் தங்களின் கீழ் வேலை செய்யும் தொழிலாளர் துணை ஆய்வாளர்கள், தொழிலாளர் உதவி ஆய்வாளர்கள் மற்றும் முத்திரை ஆய்வாளர்களிடம் கையூட்டாக பணம் பெறுவது வழக்கம் என்றும் அவ்வாறு பணம் வாங்கியது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட முறைகேடுகள் சம்பந்தமாக திரு.எம்.ராஜசேகரன், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்), கோவை, திரு.பி.லெனின், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்), திருப்பூர் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.Sd-10.11.2018 (P.N.பிரபாகரன்) மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர், கோயமுத்தூர். இணைப்பு: 1) நடவடிக்கை குறிப்பு 2)

கைப்பற்றப்பட்ட பணம் ரூ.48,000/- 3)பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் 4)கைப்பற்றப்பட்ட ஆவணங்கள். முதல் தகவல் அறிக்கையின் அசலை சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயமுத்தூர் அவர்கள் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டன.

22.3.19

காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
கோயமுத்தூர்